## 123. உங்க நாவ கொஞ்சம்

### பல்லவி

உங்க நாவ கொஞ்சம் அடக்கி வெச்சிடுங்க
அது இயேசு சாமி உறுப்பு தானங்க

### அனுபல்லவி

துதிக்கவும் ஸ்தோத்தரிக்கவும் பயன்படுத்துங்க
வீணான பேச்சை அதில் பேசாதிங்க

### சரணங்கள்

1. சிறிய நெருப்பு பெரிய காட்டை கொளுத்துவதுபோல்
சிறிய நாவு வாழ்க்கை எல்லாம் சேதமாக்குங்க
- உங்க நாவ

2. இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசுங்க
அந்த இருதயத்தில் எந்த கசப்பும் சேர்த்திடதிங்க
- உங்க நாவ

3. பகைகளும் கசப்புகளும் விரோதங்களும்
நாவினால் நம் வாழ்க்கையில் உருவாகுதுங்க
- உங்க நாவ

4. ஜீவனுக்கும் மரணத்திற்கும் அதிகாரியாய்
நம் நாவை தானே தேவன் வைச்சாருங்க
- உங்க நாவ